பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 19 (3—9—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆவணி 20 (4—9—68) புதன் [இதழ்: 68

ஆசிரியர் தினம்

ஆசிரியர்களின் நலமே நாட்டின் நலம்.

ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5-ம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுவது இந்நாட்டு மக்களின் கடமை யாகும்.

இந்நன்னாளில் மக்களனைவரும் மனமுவந்து ஆசிரியர் நல நிதிக்குப் பொருளுதவி வழங்குமாறு வேண்டுகிறோம்.

மக்களாட்சி முறையே சிறந்தது

அதன் வெற்றிக்கு மற்ற நாடுகளும் சேர்ந்து பாடுபட வேண்டும்

தமிழகத்தின் விழிப்புணர்ச்சியும் துணை புரிகிறது

அமெரிக்கத் தேர்தல் கண்காட்சித் திறப்பு விழாவில் அண்ணா விளக்கம்

சென்னை, செப். 3—

" 'சனநாயக முறை திறமையாகச் செயல்படக்கூடியதா—பயன் தரத்தக்கதா' என்ற ஐயப்பாடுகளும், அச்சங்களும் உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவுவதை நாம் காண்கிறோம்.

"மற்ற அரசியல் முறைகளைவிட சனநாயக முறை ஆற்றல்மிக்கதாயும், முழுமையாகவும் பலனளிக்கக்கூடியது என்பதை மெய்ப்பிக்க வேண்டியது சனநாயகத்தில் முழு நம்பிக்கை கொண்டுள்ள நாடுகளின் கடமையாகும்.

"சனநாயக முறைதான் நிச்சயமான—பாதுகாப்பான முறை என்பதை உலகத்திற்கு மெய்ப்பிக்க இந்தியாவுடன் மற்ற எல்லா சனநாயக நாடுகளும் ஒன்றுசேரும் என நம்புகிறேன்.

"சனநாயகம் ஒரு சாதாரண அரசியல் முறை மட்டுமன்று; மிகச் சிறந்த அரசியல் முறையாக அது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஒரு நாட்டில் உருவாகியிருக்கும் பாரம்பரியத்தை ஒட்டியே அதன் வெற்றி—தோல்வியை நிர்ணயிக்க முடியும்.

"ஒவ்வொரு தனி மனிதரிடமும் சனநாயக உணர்வு ஏற்படுத்தப்படவில்லையானால்—ஒவ்வொருவரின் நடவடிக்கைகளிலும் அது இணைந்திருக்கவில்லையென்றால், வெறும் சனநாயக முறை மட்டும் ஒரு நாட்டிற்குப் பலன் தராது.

"சனநாயகத்தில் சில குறைபாடுகள் உண்டு; என்றாலும் மற்ற அரசியல் முறைகள் செய்ய இயலாத சிலவற்றைச் சனநாயக முறை செய்யக்கூடும்.

"இந்திய சனநாயகம் மிகப் பெரியது—புதியது; ஆனால், துரதிருஷ்டவசமாக அது மிகவும் ஏழ்மையானது!

"தமிழகத்தில் மக்களிடையே உள்ள விழிப்புணர்ச்சி, நாட்டின் மற்ற பகுதிகளில் இருப்பதைவிடக் கூடுதலானது; சனநாயகத்தின் வெற்றிக்கு அது துணைபுரிகிறது"

என்றெல்லாம் முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று, 'அமெரிக்காவின் தேர்தல் முறை' பற்றிய கண்காட்சியை இராஜாஜி மண்டபத்தில் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அமெரிக்காவைப்போல இந்தியாவும் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஒன்றைச் சோதித்துப் பார்க்கவும், தவறு ஏற்பட்டால் திருத்திக்கொண்டு சீரமைத்துக் கொள்ளவும் சனநாயகமே சிறந்த வாய்ப்பு அளிக்கிறது. இந்தச் செயல் முறையே எல்லோரது திறனையும், ஆற்றலையும் ஒருங்கிணைத்து இலட்சிய ஈடேற்றத்துக்குத் துணைபோகச் செய்கிறது. சனநாயகம் ஒன்றில்தான் முடக்குவாதங்கள் ஏற்படுவதில்லை!

மக்களுக்கு வழிகாட்டியாக வேண்டும். நல்ல காரியங்கள் நடந்தேற நல்வழிகாட்டினாலன்றி, சனநாயகம் வெற்றி பெறாது.

இந்தியாவில் நாங்கள் எங்கள் சக்திக்கேற்ற வரையில் சனநாயகத்தைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறோம்.

சில மாதங்களுக்குமுன் நான் அமெரிக்க நாட்டில் இருந்த நேரத்தில் துவக்கக்கட்டத் தேர்தல்களில் அந்நாட்டினர் ஈடுபட்டிருந்தனர். இங்கே ஒவ்வொரு கட்சியும் தனது வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கிறது. அமெரிக்காவில் இத்தேர்வு அடித்தளத்திலிருந்தே நடக்கின்றது. முடிவாக தேசிய மாநாட்டில் ஒருவர் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளராகத் தேர்வு செய்யப்படுகிறார். அதுவரையில், போட்டியிட்டவர்களெல்லாம் அந்த அறிவிப்பு வந்ததும் தங்கள் தங்கள் கட்சியின் வேட்பாளருக்குப் பின்னால் ஒன்று சேர்ந்து பாடுபடுகிறார்கள்.

அத்தகைய ஒருமுறை, வெப்ப நாடான நமது நாட்டுக்குப் பொருந்துமா—சூடு அதிகமான நமது நாட்டில் அத்தகைய வாய்ப்பு இல்லை!

அமெரிக்க நாட்டிலும் சில அதிர்ச்சியூட்டும் துயர நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிடுகின்றன. அவற்றைப் பார்க்கும்போது கடுங்கோபம்தான் ஏற்படுகிறது. வெற்றிகரமான தேர்தல் பிரசாரத்திற்கிடையே கென்னடி சுட்டுக்கொல்லப்பட்டார் என்பதையும், அதற்குமுன் அவருடைய தமையனார் சுடப்பட்டதையும் நாமறிவோம்.

துப்பாக்கியும் கையுமாக உலவும் வெறியர் கூட்டத்தின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்க நாட்டார் தங்கள் அறிவால்—ஆற்றலால் முற்றுப் புள்ளி வைத்தே தீருவர்!

இந்தப் பயங்கரங்களுக்குக் காரணமாக உள்ளவர் மிகச் சிலராகவும், சனநாயகப் பண்பில் ஊறியவர்கள்—அதை உயர்த்திப் பிடிப்பவர்கள் மிகப் பலராகவும் அந்நாட்டில் இருப்பதையும் நாமறிவோம்.

இந்திய நாட்டில் அரசியல் கட்சிகள், பேச்சில் சூடேற்றிக் கொண்டாலும் செயலில் இறங்கும்போது, மென்மை தெரியும். நான்கு பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. 'சாதி—சமய வேற்றுமைகள் மலிந்து கிடக்கும் நாடு இது' என்றாலும், தேர்தல் சண்டைகளில் பலியானோர் எண்ணிக்கை, அமெரிக்க விடுமுறை நாளொன்றில் பலியாவோர் எண்ணிக்கைக்கு ஈடாகாது."

மக்களின் விழிப்புணர்வைக் காட்டிவிட்டது

கடந்த பொதுத் தேர்தல்

மக்கள் வாக்குகளைப் பெற்றே ஆட்சியை மாற்ற முடியும்

தேசியப் பிரச்சினைகளைத் தெருக்களில் தீர்த்துவிடக் கருதுவது தவறு

முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி கருத்துரை

புதுடில்லி, செப். 3—

"சில அரசியல் கட்சிகள், 'தேசியப் பிரச்சினைகளைத் தெருக்களில் தீர்த்துவிட முடியும்' என்று கருதுகின்றன. இதுபோன்ற போக்கு சனநாயகத்தையே சின்னாபின்னமாக்கிவிடும்!

"நமது அரசியல் சட்டத்தின் மிகச் சிறந்த பகுதி— 'தேர்தல் நடத்தி மக்களின் வாக்குகளைப் பெற்றே ஆட்சியை மாற்ற முடியும்' என்ற ஒப்பற்ற பகுதியாகும்; இந்த அரிய தத்துவத்தைச் செயல் முறையில், கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் செய்து காட்டிவிட்டனர். வாக்குப் பெட்டியின் வாயிலாகவே ஆட்சி மாற்றம் நடைபெற்றுள்ளது.

"கடந்த தேர்தல், உண்மையான தேர்தல்; அது மக்களின் அரசியல் மேதைத்தன்மையை — விழிப்பைத் தெளிவாகக் காட்ட உதவிற்று!"

என்று, இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. கசேந்திர கட்கார் கருத்தறிவித்தார்.

காந்தி அமைதி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த 'சனநாயகமும் அகிம்சையும்' என்ற பொருள் பற்றிய நான்கு நாள் கருத்தரங்கை முடித்துவைத்து ஆற்றிய உரையில் அவர் மேலும் கூறியதாவது:—

"நாட்டின் சமூக—பொருளாதார முன்னேற்றங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்கம் நிறைவேறுவதற்கு அறிஞர்கள் உதவ வேண்டும். நாட்டின் எதிர்காலத்தை அரசியல்வாதிகளிடம் மட்டுமே விட்டுவிடக்கூடாது.

"ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளிடையே ஒரு போலிக் கோட்பாடு—ஒரு மூட நம்பிக்கை வளர்ந்துவருவதைக் காண்கிறோம்; அது ஆபத்தானது!

"ஒரே கட்சி நீண்ட காலம் ஆட்சியில் இருப்பதன் விளைவு என்னவெனில், ஊழல் பெருகியிருப்பதுதான்! ஒரே கட்சி ஆட்சி நடத்துவதால் ஏற்படக்கூடிய தவிர்க்க முடியாத விளைவு இது!

"சனநாயகம் நிலைபெற்று விளங்க அகிம்சை நிறைந்த ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்; அறிஞர்கள்தான் இந்நிலையை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"தனிப்பட்டவர்களுக்கும் சமூக நீதியும், அடிப்படை உரிமையும் கிடைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு இணைப்பே இந்திய அரசியல் சட்டமாகும்.

"நான் அகிம்சையை ஒரு நீதியாகவோ, ஆன்மீகத் தத்துவமாகவோ கருதவில்லை; அதை ஒரு சட்டத்தின் கட்டுக்குட்பட்ட — பகுத்தறிவுக்கொவ்வான — நேர்மை வாய்ந்த ஒரு தத்துவம் என்றே கருதுகிறேன்."

இந்தக் கருத்தரங்கில் யு.என். தேபர், ஆர்.ஆர். திவாகர், டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் (மத்திய அமைச்சர்), சாக்ளா, டாக்டர் குன்சுரு, உமாயூன் கபீர் முதலானோர் உரை நிகழ்த்தினர்.

நில நடுக்கம் வாங்கிய காவு

தெஹ்ரான், செ. 2—

கிழக்கு ஈரானில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நில நடுக்கங்களாலும் மாண்டவர்கள் தொகை 20 ஆயிரத்தை எட்டியிருக்கிறது.

ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.

ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வீடு வாசலிழந்து தவிக்கின்றனர்.

இந்திய மைக்கா தொழிலுக்கு ஆபத்து?

சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள செயற்கை மைக்கா, இந்தியாவிற்கு ஆபத்தாக அமையலாம்!

"ஒளி ஊடுருவக் கூடியதாகவும், சிறந்த மின்னோட்டத் தடைப் பொருளாகவும் செயற்கை மைக்கா இருக்கிறது; மிகுந்த வெப்பத்தையும் அது தாங்கி நிற்கும்" எனக் கூறப்படுகிறது.

தமிழையும் அண்ணாவையும் அகிலமே போற்றுகிறது!

சென்றவிடமெங்கும் சிறப்புபெற்றோம்

சென்னை--வால்காகிராடு நட்புறவின் நற்பயன்

வானொலியில் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

"வான்புகழ் கொண்ட வள்ளுவரையும், வையத்து மக்கள் வாழும் நெறிமுறைகளை வகுத்துத் தந்த தொல்காப்பியத்தையும், உலகமே வியந்து பாராட்டிய உலகத் தமிழ் மாநாட்டு மலரையும், இயல்–இசை–நாடகம் ஆகிய முத்தமிழின் மூலம் மூவேந்தர் ஆண்டிருந்த தமிழகத்தின் சிறப்பைத் தரணிக்குக் காட்டிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை எல்லாரும் அறியும்வண்ணம் எளிய -- இனிய தமிழில், கலைஞர் அவர்கள் எழுதித் தந்த சிலம்பையும், தமிழகத்துக் கைவண்ணப் பொருள்களையும் எங்களோடு எடுத்துச் சென்றோம்; சென்ற நாடுகள் அனைத்திலும் எங்களுக்குச் சிறப்பான வரவேற்பு கிடைத்தது.

"ரோம், இலண்டன், ஹாலே, வால்காகிராடு ஆகிய நகரங்களில் உலகத தமிழ் மாநாட்டுத் திரைப்படத்தைக் காட்டியபோது அவர்கள் காட்டிய உற்சாகமும், வரவேற்பும் ஆரவாரமும், மகிழ்ச்சியும் எங்களைத் திணற வைத்தது!

" 'தமிழ் கூறும் நல்லுலகின் பண்டையச் சிறப்பினையும், அதனைக் கட்டிக்காக்க இன்றையத் தமிழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளையும் உலகம் அறிந்து போற்றுகிறது' என்ற பெருமித உணர்வோடு நாங்கள் நிமிர்ந்து நின்றோம்.

"தமிழிலக்கிய பெட்டகங்களை ஆங்காங்குள்ள பெரியோர்கள் சிலருக்கு வழங்கியபோது, 'தமிழுக்குத் தொண்டு செய்கிறோம்' என்ற தணியாத மகிழ்வு எங்களுக்கும், வாங்கியபோது, 'தமிழின் சிறப்பு எவ்வளவு உயர்ந்தது' என்ற எண்ணம் அவர்களுக்கும் ஏற்பட்டது!

"குறிப்பாக, எல்லா நாடுகளிலும் தமிழ் மொழியின் சிறப்பினையும், தமிழ் நாட்டின் சிறப்பினையும், தமிழகத்துத் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் பெருமையினையும் கற்றோர் பலரும் தெளிவுறத் தெரிந்துள்ள பான்மையினைக் கண்டோம்"

என்று, உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தைக் குறித்து வானொலியில் ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் உரை வருமாறு:—

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந்தலை"

என்ற வள்ளுவர் வாய்மொழியைச் செயலாக்கும் நோக்கோடு, காஞ்சி தந்த கருவூலம் -- கன்னித் தமிழ்க் காவலர் -- பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகராட்சியின் தூதுக் குழுவிற்குத் தலைமையேற்று — ரோம், பாரிஸ், இலண்டன், ஆம்ஸ்டர்டாம், ஜெர்மானிய சனநாயகக் குடியரசு, சோவியத் ஒன்றியம் ஆகிய இடங்களுக்குச் சென்று பலவற்றைக் கண்டு -- கருத்து வளம் பெற்றுத் தாயகம் திரும்பியதில் எல்லையற்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் ஏற்படுகின்றது.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' என்ற முழக்கத்தை எழுப்பிய கவிஞர் பெருமகனின் கனவு நனவாகும் வண்ணம், அண்மைக்காலத்தில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்ற சில திங்களுக்குமுன், பேரறிஞர் அண்ணா அவர்களின் செந்தமிழ்ச் சுவையை 'யேல்' பல்கலைக் கழகமும், அமெரிக்க நாட்டின் மற்ற பல பகுதிகளும் பருகியதை நாம் அறிவோம்.

மாண்புமிக்க உணவுத் துறை அமைச்சர் மதியழகன் அவர்கள் ரோம் நகரிலும், மாண்புமிக்க செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் மொரிஷியஸ் தீவிலும் தமிழ் முழக்கமிட்டுத் திரும்பிய காட்சியினைக் கண்டு, தமிழகமே களிபேருவகை கொண்டது.

அத்தகையோர் வழிநின்று நானும்---நம் மாநகராட்சிக் குழுவினரும், தமிழின் சிறப்பைத் தரணிக்கு எடுத்துக்காட்டும் வாய்ப்பினைப் பெற்றோம்.

செல்லும் இடங்களில் இப்பணியினைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்ற விருப்புடன் தமிழகத்தின் பெருமக்கள் பல்லோர் எங்களை வாழ்த்தி வழியனுப்பினர்.

இலண்டன் மாநகரத்துத் தமிழ்ச் சங்கத்தின் வரவேற்பு, எங்கள் வாழ்நாளிலே மறக்க முடியாத ஒன்றாகும்.

தமிழகம், இலங்கை, மலேசியா' மொரிஷியஸ், மற்றும் பல பகுதிகளிலிருந்து அங்கு வந்து வாழ்கின்ற தமிழினத்தைச் சார்ந்தோரும், தமிழறிந்த சான்றோரும் ஒன்றுகூடிப் பல்லாண்டுக் காலமாக இச்சங்கத்தைப் பெருமையுற நடத்தி வருகின்றனர். தமிழறிந்த ஆங்கிலப் பெருமக்கள் சிலரும் இச்சங்கத்தில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

செட்டிநாட்டைச் சார்ந்த திரு. மெய்யப்பன் அவர்கள் தலைவராகவும், திரு. ராஜ்போனி அவர்கள் செயலாளராகவும் இருந்து இதனைக் கட்டிக்காத்து வருகின்றனர். இச்சங்கம் வளர தமிழகத்துப் பெருமக்கள், ஒல்லும் வகையில் எல்லாம் உதவக் கடமைப்பட்டவர்கள் என்பதை எடுத்துரைப்பது எனது கடமையாகும்.

மாநகரங்களின் தலைவர்கள், நகரக் குழுவினர் பலரைக் காணவும், நகராட்சி நிர்வாக முறைகளை அறியவும் வாய்ப்புக் கிடைத்து — நகரத்தின் முன்னேற்றத்தை மனதில்கொண்டு, பல புதிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயலாக்குவதில் முனைந்துள்ள காட்சியினைக் கண்டோம்!

குறிப்பாக, ஜெர்மன் சனநாயகக் குடியரசு நகரங்களான ஹாலே, பெர்லின் ஆகிய நகரங்களின் வளர்ச்சியும், சோவியத் ஒன்றியத்தின் தலைநகரான மாஸ்கோவின் முன்னேற்றமும், வால்காகிரேட் நகர அமைப்பும் எங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன!

உலகப் பெரும் போரின் விளைவாசப் பெரும்பாலும் நிர்மூலமாக்கப்பட்ட இந்த நகரங்கள், இன்றைக்கு எழிலோடு காட்சியளிக்கின்றன!

நகரத்தின் தேவைகள் அனைத்தையும் நகர மன்றங்களே ஏற்று—அவற்றைத் தீர்த்து வைப்பதில் மகத்தான வெற்றி கண்டுள்ளன!

65 இலட்சம் மக்கள் வாழும் மாஸ்கோ நகரின் குடியிருப்புப் பிரச்சினையைத் திறமையாகச் சமாளித்துள்ளனர்!

ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஐந்து இலட்சம் மக்களுக்குப் புதிய வீடுகள், மாஸ்கோ நகரில் அமைக்கப்படுவதாக அந்நகரத் தலைவர் விளக்கினர்.

மாஸ்கோ, வால்காகிராடு, பெர்லின், ஹாலே போன்ற நகரங்களில் -- அவர்கள் வீடுகளை அமைக்கும் முறையே விந்தையாக உள்ளது!

உறுதியான வீடுகளைக் குறைந்த செலவில் -- குறுகிய காலத்தில் கட்டி முடிக்கின்றனர்!

பல மாடிக் கட்டிடங்களுக்குத் தேவைப்படும் சுவர் உள்ளிட்ட பகுதிகள் அனைத்தையும் தொழிற்சாலைகளில் உருவாக்கி, அவற்றைக்கொண்டு கட்டிடங்களை உருவாக்குகிறார்கள்!

இத்தகைய Pre-Fabricated Units ஒவ்வொரு நகரிலும் அமைக்கப்படுவதைக் கண்டோம். வளர்ந்துவரும் சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் இம்முறை பின்பற்றப் படுமானால் அது பெரும் பயனை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழக அரசின் துணையோடு இம்முயற்சியில் ஈடுபட நகர் மன்றங்கள் முன்வரும் என்று நம்புகிறேன்.

கிழக்குப் பெர்லின் நகரத்தின் ஊடே நெளிந்து வளைந்து செல்லுகின்ற பல நீரோடைகளை ஒன்றாக இணைத்து -- ஏறத்தாழ முப்பது கல் தொலைவிற்கு விசைப் படகுகள் செல்லும் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளனர்.

பெர்லின் நகரத் தலைவரோடு நாங்கள் உல்லாசப் படகுப் பயணத்தை மேற்கொண்டோம்; மூன்று மணி நேரம் எங்கள் பயணம நீடித்தது. கால்வாயின் இருபுறங்களிலும் அமைந்துள்ள பசுமையான சோலைகளிடையே அமைக்கப்பட்டுள்ள ஓய்வுக் கூடங்களில் தங்கி பெர்லின் நகர மக்கள் அனைவருமே படகுப் பயணம்மேற்கொண்டு பொழுது போக்குவது, மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அப்பொழுது, 'சிங்காரச் சென்னையில் ஓடும் கூவம் ஆற்றிலும் ஒருநாள் படகில் செல்லுவோம்' என்ற உணர்வு என் உள்ளத்தில் எழுந்தது; 'முயற்சி திருவினையாக்கும்' என்று முழுமையாக நம்புகிறேன்.

நகரின் கல்விக்கூடங்கள்—சுகாதார நிலையங்கள்—போக்குவரத்துச் சாலை அமைப்பு—நீர் வழங்கும் திட்டம்—நீச்சல் குளங்கள்—மனமகிழ் மன்றங்கள்—விளையாட்டு மைதானங்கள்—விளக்கு வசதிகள் முதலிய அனைத்துமே சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பினைக் கண்டோம்.

மாஸ்கோ, வால்கா நகரங்கள் தூய்மையாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளன. விடிவதற்குள் வீதிகள் அனைத்தும் கழுவப்பட்டு, தூய்மைப்படுத்தப்படுகின்றன.

இவ்வளவு விரைவான முன்னேற்றங்களுக்குக் காரணம் என்ன?—அந்நாட்டின் தொழில் முன்னேற்றமும், மக்களின் கட்டுப்பாடான உழைப்பும், அவர்கள் வகுத்துக்கொண்டுள்ள விதிமுறைகளும் அடிப்படைக் காரணங்களாகும். நகரத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருக்கின்றன.

நமக்குள்ள நிதி வசதிகளைக் கொண்டு, கண்டறிந்து வந்தவைகளை அனைத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்த இயலாது; எனினும், இயன்ற வரையில் முயன்று முன்னேற்றம் காண முற்படுவோமாக!

பல்வேறு நாட்டு மக்களையும், பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும், நிர்வாக முறைகளையும் இந்தியத் துணைக்கண்டத்தின்மீது அவர்கள் கொண்டுள்ள நட்புறவையும், நல்லெண்ணத்தையும் அறிந்துகொள்ள இப்பயணம் பெருந்துணை புரிந்தது என்பதில் துளியும் ஐயமில்லை.

தூதுக் குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்களான சென்னை மாநகரத் தந்தை டாக்டர் அபிபுல்லா பேக், முன்னாள் மேயர் வி. முனுசாமி, திரு. ஜி. உமாபதி, ஹாஜி சிலார் மியான், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜே. ஏ. அம்பாசங்கர் ஆகியோர், கடமையுணர்வோடும் கண்ணியத்தோடும் கட்டுப்பாட்டுடனும் பயணத்தைப் பயனுள்ளதாக்கினர்; அக்குழுவினருக்கு என் நன்றி உரித்தாகட்டும்.

இலண்டனில் பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகிய 'ஊராளுமன்றத்திலிருந்து பாராளுமன்றம்வரை' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சியில், மாநகராட்சித் தூதுக் குழுவினர் அனைவரும் பங்கேற்றோம்.

மாஸ்கோ வானொலி நிலையத்திலிருந்து, 'லெனினது நாடு' என்னும் தலைப்பில் பேசும் வாய்ப்பைப் பெற்றேன். அப்போது, பாவேந்தர், பாரதிதாசன் அவர்களின் 'உலகம் உன்னுடையது' என்ற வரிகளை எடுத்துக் கூற நேர்ந்தது.

குறிப்பாக—

"மனிதரில் நீயுமோர் மனிதன் -- மண்ணன்று; இமை திற -- எழுந்து நன்ருய் எண்ணுவாய்; மீசையை முறுக்கி மேலே ஏற்று; விழித்த விழியில் மேதினிக் கொளி செய்"

என்ற வரிகளை நான் நினைவூட்டியபோது, அவை, லெனின் அவர்களின் வீர உரைகளை எதிரொலிப்பதாகத் தமிழறிந்த சோவியத் நாட்டினர் கூறினர்.

அந்த நாடுகளின் வானொலி நிலையங்களில் மட்டுமன்றி, நாங்கள் சென்ற இடங்களிலுள்ள செய்தித் தாள்களில் எல்லாம் எங்கள் வருகையைப் பற்றிய செய்திகளை நன்கு வெளியிட்டு -- நட்புறவுக்கு உரமூட்டின என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை நதி பாயும் வளமார் தமிழகத்தின் தலைநகராம் சென்னையும்–வால்கா நதி பாயும் வால்காகிராடும், நகரும் நட்பு நகரங்களாக இணைந்துள்ளன.

'யாதும் ஊரே—யாவரும் கேளிர்' என்ற தத்துவத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்ற இந்த நட்புறவு, நாளும் வளரவேண்டும்! வாழ்க தமிழ்! வணக்கம்."

மூன்று மாநிலங்களில் இடைத் தேர்தல்கள்

டெல்லிக்கு ரூ. 2.85 கோடி செலவாகுமாம்

புதுடில்லி, ஆக. 30—

"மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தல்களுக்காக மத்திய அரசுக்கு ரூ. 2.85 கோடி செலவாகும்"

என்று மக்களவையில், சட்டத் துணை அமைச்சர் முகம்மது யூனிஸ் சலீம் தெரிவித்தார்.

மத்திய அரசுக்கு மாநில வாரியாக எவ்வளவு செலவாகும் என்பதையும் அவர் தெரிவித்தார்:—

மேற்குவங்கம்	ரூ.	60இலட்சம்
உ. பி.	ரூ.	1.25 கோடி
பீகார்	ரூ.	1 கோடி

மேற்கு வங்கத்தில் நவம்பரிலும், உ. பி., பீகார் ஆகியவைகளில் பிப்ரவரியிலும் இடைத் தேர்தல்கள் நடத்துவதெனத் தேர்தல் குழு தற்காலிகமாக முடிவு செய்திருக்கிறது.

விளைச்சல் அதிகரிப்பு

நாடாளுமன்றத்தில் தகவல்

புதுடில்லி, ஆக. 31—

"1966—67-ஆம் ஆண்டைவிட 1967—68-ல் நாட்டில் உணவு உற்பத்தி 28.8 சதவிகிதம் பெருகியிருக்கிறது"

என, நாடாளுமன்றத்தில் உணவு-வேளாண்மைத் துறைத் துணை அமைச்சர் தெரிவித்தார்.

சாகுபடி பரப்பளவு 5.4 சதவிகிதம் அதிகரித்திருப்பதாகவும், விளைச்சல் 9.56 கோடி டன் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

சாலைகளை அடிக்கடித் தோண்டி மூடும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி

தானே இயங்கும் இயந்திரத்தின் சாதனை

எல்லா நகரங்களிலும் இப்போது குடிநீர்க் குழாய், மின்சாரம், டெலிபோன், மற்றும் சாக்கடைக் குழாய் போடுவதற்காக அடிக்கடி தெருக்களைத் தோண்டித் தோண்டி மூடுவது வழக்கமாக இருக்கிறதல்லவா? இதனால் ஏற்படும் தொல்லைகளை விவரிக்கத் தேவையில்லை. இந்தத் தொல்லைகளுக்கு முடிவுகட்ட ஒரு புதிய இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளது பிரிட்டிஷ் நிறுவனம ஒன்று.

தரையைத் தோண்டாமல் கீழே குடைந்து அதில் நமக்குத் தேவையான குழாய்களைப் போட்டுவிடும் இந்த இயந்திரம். இணைப்புப் பகுதிகளில் மட்டும் தோண்டி இணைத்தால் போதும். தரை மட்டத்திற்கு 9 அடி ஆழம் வரையில் குழாய்களை வைக்கலாம்.

தானே இயங்கக்கூடிய இந்த இயந்திரம் 38 டன் எடையுள்ளது. ஒரே இயக்கத்தில் 600 அடி தூரம் வரை பூமிக்குள் குடையும் திறன் உள்ளது. ஒரு நாளில் 8 மணிநேர வேலையில் இந்த இயந்திரம் பூமியின் மேல் தோண்டவேண்டிய அவசியமில்லாமல் 300 கெச தூரம் குழாய் போட்டுவிடும்.

எரி வாயு, எண்ணெய், தண்ணீர் இவற்றைக் கொண்டு செல்லும் குழாய்களும், மின்சார—டெலிபோன் கம்பிகளும் போடுவதற்கு மிகவும் ஏற்ற இந்த இயந்திரம் பல நாட்டு அரசாங்க நிர்வாகங்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

கூட்டுறவுஇயக்கத்துக்கு ஆக்கமளிக்கும் திட்டம்

ஓட்டும் தொழிலாளிக்கே டாக்சி உரிமையாகும் ஏற்பாடு

முதலமைச்சர் அண்ணு வாழ்த்துடன் அமைச்சர்கள் பங்கேற்ற விழா

சென்னை, செப். 3 —

"கூட்டுறவுத்துறை என்ற நேர்த்தியான நோக்கம் சமுதாயத்திற்கு எப்படிப் பயன்பட வேண்டும் என்பதை அறிந்து செயலாற்றத் தான் ஏற்பட்டது; அதன் நோக்கத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள் சிலர்; சுருக்கமாகச் சொன்னல், கோயில் பெருச்சாளியைப்போல் கூட்டுறவுத் துறையிலும் பெருச்சாளிகள் தோன்றின என்றுல் மிகையாகாது.

"ஒரு சிலர் இப்படிப்பட்ட பெருச்சாளி வேலையில் ஈடுபட்டாலும், நல்லவர்கள் கூட்டுறவின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கிறுர்கள்"

என்று, பொதுப்பணி அமைச்சர் மு. கருணுநிதி அவர்கள், டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்க விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

சென்னை டாக்சி டிரைவர்கள் சங்கத்தால் தவணை முறையில், 'டாக்சிகளை டாக்சி டிரைவர்களுக்கே உரிமையாக்கும் திட்ட'த் துவக்க விழா, இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடைபெற்றது.

துவக்க விழாவிற்குப் பொதுப்பணி அமைச்சர் திரு. மு கருணுநிதி அவர்கள் தலைமைவகித்தார்.

சட்ட அமைச்சர் மாதவன், கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசினுர்.

வருகைதந்த அனைவரையும் சென்னை டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என். வி. நடராசன் எம்.எல்.சி. வரவேற்றுப் பேசினுர்.

திட்டத்தை வாழ்த்தி முதலமைச்சர் அண்ணு அவர்கள், வாழ்த்து ஒன்று அனுப்பியிருந்தார்கள்; என். வி. நடராசன், அவ்வாழ்த்தைப் படித்து வரவேற்புரையாற்றினுர்.

மு. கருணுநிதி

அமைச்சர் மு. கருணுநிதி அவர்கள் மேலும் பேசியதாவது:–

"இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் வழங்கிய வாழ்த்துரையில் குறிப்பிட்டதுபோல், என். வி. என். அவர்களின் முயற்சியாலும்—கூட்டுறவுத் துறை அமைச்சர் மாதவன் அவர்களின் ஒத்துழைப்பாலும் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், சிறந்த பயனுள்ள திட்டமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத் திட்டம் புனிதமான நோக்கத்துடன் துவக்கப்பட்டு இடையே மாசு -- மரு படிந்த நிலையில் பார்க்கப்பட்ட நிலையை அமைச்சர் மாதவன் சுட்டிக் காட்டினுர்.

ஏனெனில், பல ஆண்டுகளாகச் சங்கத் தலைவராக இருக்கும் என். வி. என். அவர்களை நீங்கள் அறிவீர்கள்; சென்னையிலுள்ள கூட்டுறவுச் சங்கத்திற்காக அவர் ஆற்றியுள்ள பணிகளை நான் அறிவேன். அது மட்டுமல்ல; அவர் பதவியேற்றபின் வேலைநிறுத்தங்களும் குறைவு.

ஆளுங் கட்சி என்பதால் மட்டுமல்ல -- எதிர்க் கட்சியாக இருக்கும்போதே டாக்சித் தொழிலாளர்கள், 'பயணிகளிடம் எப்படிப் பழகவேண்டும்' என்பதை அறிவுறுத்தியிருக்கிறுர்; அந்த அளவுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும், நல்ல வழிக்குக் கொண்டுவந்திருக்கிறுர்.

'முழுமையாக' என்று நான் கூறினேன்; ஏனென்ருல், நானே காரில் சென்றபொழுது டாக்சியை 'ஓவர்டேக்' செய்த ஒரு டாக்சி டிரைவர், என் டிரைவர் மீதே பாய்ந்த பாய்ச்சலை ஒரு சமயம் நேரில் அறிந்திருக்கிறேன்; அமைச்சருக்கே இப்படி என்ருல், சாதாரண மக்கள் கார்களில் செல்லும்போது எப்படியிருக்கும் என்பதை நானே கொஞ்சம் எண்ணிப் பார்த்தேன் ஒரு சிலர்தான் இப்படிச் செய்கிருர்களே தவிர, எல்லோரும் அப்படி அல்ல.

என். வி. என். அவர்கள், முன்பே டாக்சி டிரைவர்களுக்கு ஒன்று கூறினுர்—'இறங்குகிற நேரத்தில் டிரைவர்கள், பயணிகளுக்கு வணக்கம் சொல்ல வேண்டும்' என்று. பயணிகளும் சொல்லவேண்டும். ஆனல், வணக்கம் மட்டும் சொல்லிவிட்டுப் பயணிகள் சென்றுவிடக்கூடாது; கொடுக்க வேண்டியதையும் கொடுக்க வேண்டும். இப்படியிருந்தால் டிரைவர்கள்--பயணிகள் உறவு நல்ல முறையில் இருக்கும்.

இன்றையத் தினம் இக்கூட்டுறவுச் சங்கத்தில் 32 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்; அவர்களில் 15 பேர்களுக்கு வண்டி வாங்கப்பட்டுள்ளது; மீதியுள்ளவர்களுக்கு வாங்க வேண்டும்.

மீதியுள்ளவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதோடு இது நின்றுவிடக் கூடாது; மேலும் மேலும் உறுப்பினர்கள் பெருகவேண்டும்.

சென்னை நகரில் ஓடுகின்ற டாக்சிகள் இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்க டாக்சிகளாக ஓடவேண்டும், இம்முயற்சி வெற்றி பெற என் வாழ்த்துக்கள்."

என். வி. நடராசன்

சங்கத் தலைவர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., அவர்கள் பேசியதாவது :—

"1963-ம் ஆண்டில் இந்தக் கூட்டுறவுச் சங்கம் துவககப்பட்டது. அப்பொழுதிருந்த அரசாங்கத்திடம் ரூ. 1,40,000 கடனைப் பெற்று 10 டாக்சிகள் வாங்க நினைத்து, 8 டாக்சிகள்தான் வாங்கி நடத்த முடிந்தது; பிறகு 30,000 கூட்டுறவுப் பாங்கியில் கடன் பெற்று 2 டாக்சிகள் வாங்கி -- சங்க வருமானத்தில் மேலும் 5 டாக்சிகள் வாங்கி -- ஆக 15 டாக்சிகள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனல், சென்னை டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்காக வாங்கிய அந்தக் கடன் முழுதும் செலுத்தப்படவில்லை. இன்னும் ரூ. 1,60,000 கடன் இருக்கிறது.

முன்பிருந்த சங்கத் தலைவர்கள் எவ்வளவு பாடுபடமுடியுமோ அவ்வளவு பாடுபட்டார்கள். நான் இந்தச் சங்கத்தின் தலைவரானபிறகு 'வாங்கிய கடனையெல்லாம் எப்படித் தீர்ப்பது' என்று சிந்தித்தேன். மற்றும் நண்பர்களின் ஆலோசனைகளையும் ஏற்று அரசாங்கத்திடத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தோம்.

டிரைவர்களுக்கே வண்டியைச் சொந்தமாக்கிவிட்டால் அவர்களுக்கே தனி உற்சாகம் ஏற்பட்டு ஊக்கத்துடன் கடன் செலுத்தப் பெரிதும் அக்கறையோடு முயலுவார்கள்—டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள ஒவ்வொரு டிரைவருக்கும் வண்டியைச் சொந்தமாக்கிக் கொடுக்கும்வகையில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு வண்டி சொந்தமாக ஆவதற்குச் சில விதிமுறைகள் வகுத்துத் திட்டத்தைக் கொடுத்தோம். முதலமைச்சர் அண்ணு அவர்களும், போக்குவரத்து அமைச்சர் மு. கருணுநிதி அவர்களும் அனுமதி அளித்தார்கள்; இத்திட்டம் இன்னும் விரிவாகச் செயல்பட டாகசி டிரைவர்கள் ஒத்துழைக்க வேண்டும்."

செ. மாதவன்

திட்டத்தைத் துவக்கி வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் செ. மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சென்னையிலுள்ள டாக்சி டிரைவர்களின் கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஏற்கனவே இச்சங்கம் வேருெருவரைத் தலைவராகக் கொண்டிருந்தபோது நட்டக் கணக்கையே காட்டியது; அதில், 'ரூ. 1,80,000 நட்டம்' என்று காட்டப்படுகிறது." அதனல் இம்முறையை மாற்றி -- '1961-ல் அமைத்த டாக்சி டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத் திட்டம் நல்ல திட்டம் இல்லை' எனக் கூறி, இப்பொழுதுள்ள இத்திட்டம ஏற்பட வேண்டுமெனக் கோரினர்; 'தொழிலாளர்களுக்கேடாக்சியை உரிமையாக்கிவிட்டால், நம்முடையது' என்ற உணர்ச்சி ஏற்பட்டுக் கடனைச் செலுத்த முயலுவதோடு, வண்டியையும் நனகு கவனித்துக்கொள்வார்கள்; இந்தக் கூட்டுறவுத் துறைக்கும் நட்டம் வராமல் இருக்கும் எனருர்கள்.

'கூட்டுறவுச் சங்கம்' என்ருலே அதனைக் களங்கமாகக் கருதும் அளவுக்கு நாட்டில் ஏற்பட்டுவிட்டது! அதை மாற்றி அமைத்து சீரான முறையில் இச்சங்கம் இயங்கத் துணை புரிய வேண்டும்.

வாடகைக் கார் ஓட்டுகின்ற தொழிலாளர்கள், சமுதாயத்திற்கு எந்த அளவு பயன்படுகிருர்கள் என்பது நமக்குத் தெரியும்.

இன்று தொடங்கி வைக்கும் இத்திட்டம், சிறந்த திட்டமாக இம்மாநகரில் இயங்க இச்சங்கத்தினர் பாடுபட வேண்டும்."

பின்னர் அமைச்சர் மாதவன், 15 டிரைவர்களுக்கு டாக்சியை உரிமையாக்கி, உரிமைச் சாசனங்கள் அளித்தார்.

போலீசு அதிகாரி திரு. இராதா கிருஷ்ணன், துணைத் தாசில்தார் திரு. பத்மநாபன், சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் நீலமேகம் ஆகியோரும் பேசினர்.

'கல்லூரி' என்ற பெயரில் இயங்கக் கூடாது

தனிப் பயிற்சிக் கூடங்களுக்கு அரசு கட்டளை

சென்னை, செப். 2—

"தமிழ்நாட்டில் இயங்கிவருகின்ற தனிப் பயிற்சி நிலையங்கள் (டுட்டோரியல் கல்லூரிகள்), தங்களை இனி, 'கல்லூரிகள்' என அழைத்துக்கொள்ளக் கூடாது" என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தனியார் நடத்தும் மறு பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்கீழ் இந்த விதிகள் அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திருவாரூர் நகராட்சி பொன் விழா

நகர நலனுக்கான பல்வேறு திட்டங்கட்குக் கால்கோள் நிகழ்ச்சிகள்

மூன்று அமைச்சர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்

திருவாரூர், ஆக. 31—

திருவாரூர் நகராட்சியின் பொன்விழா 29—8—68 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பொன் விழா நிகழ்ச்சியின் நினைவாக அமைச்சர் திரு. முத்துசாமி முன்னிலையில்—அமைச்சர் திரு. கருணுநிதி அவர்கள், நகராட்சி குடிநீர் நிலையத்திற்காக ஓடம்போக்கி ஆற்றங்கரையில் அடிக்கல் நாட்டினுர்.

அடுத்து விஜயபுரம் சின்னபள்ளிவாசல் தெருவில் திருமதி மீனுட்சியம்மாள் கிருஷ்ணன் செட்டியார் நினைவு நகராட்சி மருத்துவமனைக்கு சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா முன்னிலையில் திரு. கருணுநிதி அடிக்கல் நாட்டினுர்.

இக்கட்டிடத்திற்காக திரு. வி. கே. கல்யாணசுந்தரம் செட்டியார் சுமார் ரூ. 1 இலட்சம் நன்கொடை அளிக்க முன்வந்திருக்கிறுர்.

அடுத்து, விஜயபுரம் ஜமாஅத்து நகராட்சி மகப்பேறு நிலையம் கட்ட திரு. கருணுநிதி முன்னிலையில்—திரு. சாதிக் பாட்சா அடிச்கல் நாட்டினுர். இக்கட்டிடம் கட்ட முஸ்லிம் உறவின்முறை ஜமா அத்தார், சுமார் ரூ. 50,000 வரை நன்கொடை அளிக்க முன்வந்துள்ளனர்.

அடுத்து ஓடம்போக்கி ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தை, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம் முன்னிலையில்—அமைச்சர் திரு. முத்துசாமி திறந்துவைத்தார்.

அடுத்து கொடிக்கால்பாளையத்தில், திரு. சாதிக்பாட்சா முன்னிலையில்—திரு. ரங்கபாஷ்யம பூங்காவைத் திறந்துவைத்தார்.

வானெலி நிலையத்தை திரு. கருணுநிதி முன்னிலையில்—திரு. முத்துசாமி திறந்துவைத்தார்.

பூங்கா வானெலியைத் திருமதி தயாளு கருணுநிதி திறந்துவைத்தார்.

அடுத்து கொடிக்கால்பாளையம் திரு. கு. சி. முகம்மது நத்தர் மருத்துவ நிலையத்தில், மரியம் பீவி முகம்மது நத்தர் நகராட்சி தாய்—சேய் நல விடுதியை திரு சாதிக் பாட்சா திறந்துவைத்தார்.

அதே இடத்தில் திருமதி மரியம் பீவி முகம்மது நத்தர் உருவப் படத்தை திருமதி தயாளு கருணுநிதி திறந்துவைத்தார்.

இதன்பின், நகராட்சி அலுவலகத்தின்முன்பு விருந்து நடைபெற்றது.

நகராட்சிச் சார்பில் வரவேற்புரையும், வாழ்த்தும் அமைச்சர்களுக்கும், கலெக்டர் ஆகியோருக்கும் அளிக்கப்பட்டன.

பின்பு அமைச்சர்கள், திருமதி மரியம் பீவி, நகராட்சி உறுப்பினர் திரு. ஜபர் ஷேக் அலாவுதீன் ஆகியோருக்குப் பொன்னுடை போர்த்தப்பட்டது.

அமைச்சர் முத்துசாமி

இவ்விழாவில், அமைச்சர் மா. முத்துசாமி பேசியதாவது:—

"இந்நகராட்சி பொன் விழா கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பல நல்ல பணிகளைச் செய்திருப்பதும், செய்யவிருப்பதும் பெருமைப்பட வேண்டியதே.

குடிநீர்த் திட்டம் கூடிய விரைவில் துவக்கப்பட்டு சுமார் 3-ஆண்டுகளில் கண்டிப்பாக முடிக்கப்படும்.

எல்லாவிதத் தேவைகளுக்கும் அரசை எதிர்பார்க்காமல் தனவந்தர்கள் தாங்களாகவே முன்வந்து -- பல நல்ல காரியங்களுக்கு நன்கொடை அளித்து -- அவைகளைச் செயல்படுத்த வேண்டும்."

சாதிக் பாட்சா

அடுத்து திரு. சாதிக் பாட்சா பேசியதாவது :—

"முதலமைச்சர் அண்ணுவின் கீழ் தமிழக அரசு நன்கு செயல்பட்டு, மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகிறது.

நகராட்சிகளின் எந்த வேண்டுகோளையும் அரசு பரிவோடு கவனித்து ஆவன செய்யும்.

இவ்வூரில் ஒரு கலைக் கல்லூரி துவக்கவேண்டிய முயற்சி எடுத்து அடுத்த ஆண்டே ஆரம்பிக்கப்படும் என்று நம்புகிறேன்."

மு. கருணுநிதி

அமைச்சர் திரு. கருணுநிதி அவர்கள் பேசியதாவது:—

"நகராட்சி உறுப்பினர்கள் மாற்றுக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், பொது விழாக்களில் அவசியம் கலந்துகொள்ள வேண்டும்; அதுதான் அரசியல் நாகரிகம்—பண்பாடு ஆகும்.

இந்நகராட்சி செய்துள்ள நற்பணிகளைப் பாராட்ட வேண்டும்.

அதேபோல், தாம் மறுபடி பதவி வகித்தாலும் வகிக்காவிட்டாலும், நகராட்சித் தலைவர், நகரின் நலனுக்குப் பாடுபடுவதாகக் கூறுவது ஓர் உயர்ந்த சனநாயகப் பண்பாகும்.

இவ்வூருக்குத் தேவையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை திரு. சாதிக் பாட்சா கவனித்து ஆவன செய்வார் என்று நம்புகிறேன்."

முடிவில், திரு. ஜாயா ஷேக் அலாவுதீன் நன்றி கூறினுர்.

சேலம் நகராட்சி மன்றக் கூட்டம்

காந்தி நூற்றுண்டு விழாக் குழு அமைக்க முடிவு

சேலம் நகராட்சிக் கூட்டம், 29—8—68 அன்று, தலைவர் திரு. ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இந்தி ஆசிரியர்களுக்கு -- அவரவர்கள் கல்வித் தகுதிக்குத் தக்கவாறு -- மாற்று வேலை வழங்கும்படி வந்த கடிதம் பதிவு செய்யப்பட்டது.

சேலம் 18-வது வட்டத்தில் உள்ள பாவடி நகராட்சி உயர்நிலைப் பள்ளிச் சீரமைப்புக் குழுத் தலைவர் பி. எஸ். மாணிக்கம் சார்பாக ரூ. 900 விலையில் சாய்வு மேஜைகள்—ரூ. 160 விலையில் பெஞ்சுகள் நன்கொடையாக வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

காந்தி நூற்றுண்டு விழாவைச் சிறப்பாக நடத்தும்படியும், நகராட்சித் தலைவர் தலைமையில் ஒரு விழாக் குழு அமைத்துப் பொது மக்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றும்படியும் கோரும் கல்வி அமைச்சரும் மாநிலக் குழுவின் துணைத் தலைவருமான திரு. நெடுஞ்செழியன் அவர்களின் கடிதம் பதிவு செய்யப்பட்டது.

18-வது வட்டத்தில் இரண்டு குடிநீர்க் குழாய்களை, சிற்றுளி சுப்பிரமணியம் தலைமையில் ஈ. ஆர். கிருஷ்னன் எம்.எல்.ஏ. அவர்களைக்கொண்டு திறக்கவும், எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் திருமதி பேகம்கான் பி.ஏ பி.டி. அவர்களைக் கொண்டு திறக்கவும் பி. எஸ். மாணிக்கம் (தி.மு.க.) கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

"நகராட்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லாப் படிப்பகங்களுக்கும், பள்ளிக்கூட நூலகங்களுக்கும் உலகத் தமிழ் மாநாட்டு மலர் வாங்கி விநியோகிக்கலாம்" என்று, பி. எஸ். மாணிக்கம் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

வரிப் பளுவை மேலும் அதிகரிக்க முடியாது

திட்டக் குழுத் துணைத் தலைவரிடம் முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

தமிழகத்தின் நான்காம் திட்ட நோக்கங்கள் பற்றியும் விளக்கம்

சென்னை, செப். 2—

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வரி போடுவதன் மூலம் மாநில அரசு, நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் ஏற்கனவே உச்சக் கட்டத்தை எட்டியாகி விட்டது; ஆகவே, புதிய வரிகள் மூலம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைத் தேடுவதென்பது இயலாத காரியமாகும்.

"வேளாண்மைக்கு நிலத்திற்குக் கீழுள்ள நீரைப் பயன்படுத்தல்—கால்வாய்களை விரிவுபடுத்தல் — தஞ்சை மாவட்ட வடிகால் அமைப்பைச் சீரமைத்தல்—குளத்துப் பாசனம் உள்ள பகுதிகளில் குளங்களைத் தூர் எடுத்தல்—சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்— விரிவான சென்னை மாநகர் அமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளுதல்—கைத்தறி மற்றும் மூடிய ஆலைகள் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்—இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வருவோரது மறுவாழ்வுக்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் — படித்து வேலையில்லாதிருப்போர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகிய இப்பணிகளையே தமிழக அரசு நான்காம் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற விரும்புகிறது— முக்கியப் பணிகளாகக் கருதியுள்ளது"

என்றெல்லாம், திட்டக் குழுத் துணைத் தலைவர் டாக்டர் காட்கிலிடம், திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கினார்.

"மத்திய அரசானது எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்க உத்தேசித்துள்ளது? மக்கள்தொகையின் அடிப்படையிலா அல்லது குறிப்பிட்ட மாநிலத்தின் பின்தங்கிய நிலையை வைத்தா? அல்லது, 'தலைக்கட்டுக்கு இத்தனை வரி போடப்பட்டுள்ளது' என்ற அளவை வைத்தா? அல்லது அந்தந்த மாநிலத்துப் பெருநகரங்களின் தேவைகளை வைத்தா?"

என்று தாம் திட்டக் குழுத் துணைத் தலைவரிடம் கேட்டதாகவும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

"வறட்சிப் பகுதிகள் தொடர்பாகவும், பஞ்ச நிவாரணப் பணிகளிலும் தனிக் கவனம் செலுத்தப்படுமா?" என்று தாம் வினவியதாகவும் அண்ணா தெரிவித்தார்.

"எந்த அடிப்படையில்—எந்த அளவு நிதி ஒதுக்க இயலுமென்பது பற்றித் திட்டக்குழுவின் தனிக் குழு ஆராய்ந்து இம்மாதம் 13-ந் தேதி டில்லியில் முதலமைச்சர்கள் மாநாடு கூடுகிற நேரத்தில் தன் இடைக்கால அறிக்கையை அளிக்கக்கூடும் என்று காட்கில் தெரிவித்ததாகவும் அண்ணா அவர்கள் கூறினர்.

"மாநிலங்களுக்கு எந்தெந்த அடிப்படையில் மத்திய அரசினால் நிதி ஒதுக்க இயலும் என்பது பற்றிய அறிகுறி நிதிக் குழுவின் அறிக்கை வெளியானதும் நமக்குத் தெரியவரும்"

என்று அண்ணா அவர்கள் சொன்னார்.

"நிதிக் குழுவின் தற்போதைய பரிந்துரைகள் ஓராண்டுத் திட்டத்துக்குரியதாகவே அமையுமென்றும் இனி எந்தெந்த அளவு நிதி கிடைக்கும் என்பதற்கான பொது அறிகுறிகள் நமக்குக் கிடைக்கும்" என்றும் கூறினார்.

"மத்திய அரசு, தன் பொறுப்பில் தமிழ்நாட்டின் நான்காம் திட்டத்தின்கீழ் துவக்க இருக்கின்ற தொழிற்சாலைகள் எவையெவை என்று நாம் அறிய விரும்பினோம், தற்போது இது குறித்த ஆலோசனை நடந்துவருவதாகவும், விரைவில் முடிவாகுமென்றும் காட்கில் தெரிவித்தார்" என்றும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

திருமணம்

நெய்வேலித் தொழிற் சங்கத் தோழர் ச. ஆண்டகுருநாதன்—தோழியர் மனோரஞ்சிதம் திருமணம் 4-9-68 காலை, மாஸ்கோ சாலை ரஞ்சன் கிளப்பில், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்; கழகத் தொழிற் சங்கத் தோழர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்ற [illegible] கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவு அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-[illegible]) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

குமரி மாவட்டக் கழகத் தேர்தல்

குமரி மாவட்டக் கழகத் தேர்தல் 13-9-68 வெள்ளி காலை 10-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிட விரும்பும் தோழர்கள் 8-9-68-க்குள் தங்களின் வேட்பாளர் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் உரிய கட்டணத்துடன் அனுப்பிவைக்க வேண்டும். தேர்தல் ஆணையர் பெயர் பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பங்களையும் ஏற்றுத் தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புதுவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

புதுவை மாவட்டக் கழகத் தேர்தல் 8—9—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, புதுவை நகர் அம்பலத்தாடு அய்யர் மடத்துத் திருமண மண்டபத்தில் திரு. நா. தருமலிங்கம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கல்வி - தொழிலமைச்சர்

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

செப். 4 : காலை 10 மணி : திருநெல்வேலி நூல் நிலையப் பொன் விழா; மாலை 4 மணி : பாளையங்கோட்டை குருடர் பள்ளி பார்வையிடல்; 4-30 மணி : பாளையங்கோட்டை தூய சேவியர் கல்லூரித் தமிழ்ப் பேரவையில் சொற்பொழிவு; 5-30 மணி : பாளையங்கோட்டை நகராட்சி வரவேற்பு; இரவு 7 மணி ; பாளையங்கோட்டை பொதுக்கூட்டம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

4--9--68

சென்னை 8-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பண்மரத்தொட்டி அம்மன்கோயில் எதிரில்; தலைவர் : சி. பாலன் ; பேசுவோர் : வெ. கண்ணன், குமாரி மனோன்மணி, கே. ஈ. சம்பந்தம், தி. ந. மதிவாணன், இரா. மு. மனோகரன், ஆர். எல். லிங்கராசு.

திண்டுக்கல்

11-18-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு போடிநாயக்கன்பட்டியில் ; தலைவர் : வெ. பொன்னுசாமி; பேசுவோர் : எஸ். முத்து எம்.எல்.சி., க. வே. விக்கிரமாதித்தராசன், அ. தங்கவேலு.

நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல்

4--9--68 மாலை 4 மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல் 4-9-68 புதன் மாலை 4-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும். தேர்தல் ஆணையர் : முன்னாள் மேயர் அப்துல் காதர்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நாளுக்குப் பிறகு அனுப்பி வைத்துள்ள எந்த ஒரு விண்ணப்பத் தாள்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

காரைக்கால் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதற்கேற்ப காரைக்கால் வட்ட தி. மு. கழகத்தின் எல்லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல்கள் 5-9-68 வியாழக்கிழமை காலை 10-மணிக்கு காரைக்கால் பயணிகள் விடுதியில் நடைபெறும். தேர்தல் ஆணையர் : திரு. ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மாநிலங்கள் சுதந்தரமாக திட்டமிடலாம்!

ஐந்தாண்டுக்கும் மொத்தமாக நிதி ஒதுக்கப்படும்

'பெரிய நகரங்களின் வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்தப்படும்'

அண்ணாவைச் சந்தித்தபின் திட்டக் குழுத் துணைத் தலைவர் தகவல்

சென்னை, செப். 2—

"சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தமிழக அரசு தீட்டியுள்ள – வீராணம் ஏரியிலிருந்து காவிரி ஆற்று நீரைக் கொண்டுவருவதற்கான திட்டம் குறித்துத் திட்டக் குழு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது; இத்திட்டம் பற்றி மத்திய சுகாதாரத்துறையும் பரிசீலனை செய்து வருகிறது"

என்று திட்டக் குழுத் துணைத் தலைவர் டி. ஆர். காட்கில், செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் நான்காவது திட்டம் குறித்து, தமிழக முதலமைச்சர் அண்ணாவுடனும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தத் திட்டக் குழுத் துணைத் தலைவர் சென்னை வந்தார். பேச்சுவார்த்தை நடத்திய பிறகு முதலமைச்சருடன் திட்டம் குறித்து விவாதித்தார்; இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஏனைய அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் முடிந்த பிறகு, டாக்டர் காட்கில் செய்தியாளர்களிடம் கூறியதாவது :—

"மாநிலங்கள் தத்தம் திட்டங்களைச் சுதந்தரமாகத் தீட்டிக் கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

நான்காவது திட்டத்தில் தமிழகத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கும் மொத்தமாக நிதி ஒதுக்கப்படும்; அந்த நிதியை வைத்துக் கொண்டு தமிழகம் தனக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம்; மத்திய அரசுத் திட்டங்கள் இதில் சேரா; இப்புதிய யோசனைகளுக்கு மாநிலங்கள் அனைத்தும் பொதுவாகத் திருப்தி தெரிவித்துள்ளன.

சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களின் வளர்ச்சிக்கு நான்காவது திட்டத்தில் தனியாக நிதி ஒதுக்கப்படும்; பெரிய நகரங்கள் வளர்ச்சிப் பிரச்சினைகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை, விவசாய வளர்ச்சி, நிலத்துக்குக் கீழுள்ள நீரைப் பயன்படுத்துவது, துணி ஆலைத் தொழில் பிரச்சினை, வீட்டு வசதி பெருக்கம், புதிய தொழிற்சாலைகள் துவக்குவது, இலங்கைத் தமிழருக்கு மறு வாழ்வு அளிப்பது முதலிய முக்கிய பிரச்சினைகள் குறித்துத் தமிழக முதலமைச்சரும் அதிகாரிகளும் என்னுடன் விவாதித்தனர்.

தமிழ்நாட்டின் நான்காவது திட்டம தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும், திட்டத் தயாரிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் நான் முதலமைச்சரிமிருந்து கேட்டறிந்தேன்."

தோவாளை வட்ட தி.மு.க. தேர்தல்

குமரி மாவட்டம் தோவாளை வட்டக் கழகத்தின் அவைத் தலைவர் தவிர மற்ற எல்லாப் பொறுப்புகளுக்கும் 7-9-68 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பூதப்பாண்டி பயணிகள் விடுதியில் முன்னாள் மேயர் திரு. அப்துல் காதர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தங்களது வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்ட நான்கு தோழர்களின் விண்ணப்பத் தாள்கள் தவிர, ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத் தாள்களையும், மேலும் 5-9-68 இரவு 8-மணிக்குள் நாகர்கோவில் நகரில் தங்கியிருக்கும் ஆணையாளர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்களிடம் முறைப்படி நிறைவு செய்து உரிய கட்டணத்துடன் சேர்ப்பிக்கப்படும் விண்ணப்பத் தாள்களையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அகத்தீசுவரம் வட்ட தி. மு. க. தேர்தல்

குமரி மாவட்டம் அகத்தீசுவரம் வட்ட தி. மு. கழகத்திற்கான செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதி ஒருவர் ஆகிய பொறுப்புகளுக்காகத் தேர்தல் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததற்கும் பதிலாக அகத்தீசுவரம் வட்ட தி. மு. கழகத்தின் எல்லாப் பொறுப்புகளுக்கும் முறைப்படி 5—9—68 வியாழன் காலை 10-மணிக்கு தெங்கம்புதூர் தியேட்டரில் முன்னாள் மேயர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் ஆணையாளராக இருந்து நடத்திவைப்பார்.

அறிவிக்கப்பட்டிருந்தபடி புதிதாகக் கிடைத்துள்ள விண்ணப்பத் தாள்களையும், ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பத் தாள்களையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தல்கள் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

விளவங்கோடு வட்ட தி. மு. க. தேர்தல்

குமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி ஒருவருக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக அங்கு மாவட்டப் பிரதிநிதிகள் மூன்று பேருக்கான தேர்தல் நடைபெறும் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேர்தல், 7—9—68 மாலை 5 மணிக்கு குழித்துறை பயணிகள் விடுதியில், முன்னாள் மேயர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மூன்று மாவட்டப் பிரதிநிதிகளுக்கான தேர்தலில் போட்டியிட விரும்பும் தோழர்கள், 31—8—68-க்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பியுள்ள விண்ணப்பத் தாள்களையும், மேலும் 5—9—68 இரவு 8-மணிக்குள் நாகர்கோவில் நகரில் தங்கியிருக்கும் ஆணையாளர் திரு. எம். எஸ். அப்துல்காதர் அவர்களிடம் முறைப்படி நிறைவு செய்து உரிய கட்டணத்துடன் நேரில் சேர்ப்பிக்கப்படும் விண்ணப்பத் தாள்களையும் அடிப்படையாகக்கொண்டு நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)